# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2049 • நவம்பர் 17, 2018 Weekly E-paper • November 17, 2018


உள்ளே...





அறநிலையத்துறைக்கு ‘அவாளால்’ ஆபத்து

- வெற்றிச்செல்வன்

கருஞ்சட்டைப் பதிப்பகம் தொடக்கவிழா... நான்கு நூல்கள் வெளியீடு

இலங்கையின் குழப்பம்

- தலையங்கம்

# வசனம் பேசும் பாஜக வாயசைக்கும் ரஜினிகாந்த்

-சுப.வீரபாண்டியன்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2049 ●நவம்பர் 17, 2018 Weekly E-paper ● November 17, 2018

# வசனம் பேசும் பாஜக வாயசைக்கும் ரஜினிகாந்த்

சுப.வீரபாண்டியன்

பாஜகதான் பலசாலி என்று ரஜினி சொல்வது குறித்து நமக்கு எந்தக் கவலையும் இல்லை. அது அவர் கருத்து. அதனை வெளியிடுவது அவர் விருப்பம், உரிமை. ஆனால், அவர் நேர்காணல் குறித்துப் பாஜக மாநிலத் தலைவர் தமிழிசை "தன்னிலை விளக்கம்" அளித்திருப்பதுதான் இதுவரையில் நாம் காணாத புதிய அதிசயம்!

ஒருவர் அளித்த நேர்காணல் குறித்துப் பிற தலைவர்கள் கருத்து சொல்வது இயற்கைதான். அது சரி, தவறு, தெளிவாக இல்லை, கருத்து சொல்ல விரும்பவில்லை என்பன போன்ற விமர்சனங்கள்தாம் வெளிவரும். ஆனால் முதன்முதலாக, "அவர் சரியாகக் கேள்விகளை உள்வாங்கவில்லை. வேண்டுமானால், மறுபடியும் போய்க் கேட்டுப்பாருங்கள், சரியாகச் சொல்வார்" என்றார் தமிழிசை.

அடுத்த நாள் மறுபடியும் ரஜினி பேட்டி கொடுத்தார். நேற்று தெரியாத செய்திகள் எல்லாம் இன்று அவருக்குத் தெரிந்தன. நேற்று சொன்ன விடைகளுக்கு இன்று புதிய பொழிப்புரைகளைத் தந்தார். ஆபத்தான கட்சி என்றால், எதிர்க்கட்சிகளுக்கு ஆபத்தான கட்சி என்று பொருள் உரைத்தார். (எந்த ஒரு கட்சியும் அதன் எதிர்க்கட்சிக்கு ஆபத்தான கட்சிதானே)

அடிக்கடி நேர்காணலுக்கு ஒப்புக் கொள்கிறவர் இல்லை ரஜினி என்பது ஊர் அறிந்த உண்மை. ஆனால் அன்று தமிழிசை சொன்னது மாதிரி அடுத்த நாளே ஊடகவியலாளர்களைச் சந்திக்கிறார். தமிழிசை சொன்னது போலவே, அவர்களுக்குப் பிடித்த மாதிரி விடை சொல்கிறார்.

இரண்டாவது நாள் எல்லா வினாக்களையும் ரஜினி சரியாக உள்வாங்கி விட்டாரா அல்லது ரஜினியைப் பாஜக உள்வாங்கி விட்டதா!

அடுத்த நேர்காணலில் சொல்லுங்கள் ரஜினி!! ●



## சுபவீ உரையாற்றுகிறார்





22.11.2018
வியாழன்
மாலை 6.30 மணி,
பெரியார் திடல்,
சென்னை7

**"கலைஞரின் நெஞ்சுக்கு நீதி"**

**தொடர் சொற்பொழிவு,**
**பொழிவு 3**

பெரியார் நூலக வாசகர் வட்டம்




24.11.2018
சனி மாலை 6.30 மணி
தளபதியார் இலவசப் பயிற்சி மையம்,
குளம் சாலை, (வள்ளுவர் கோட்டம் அருகில்),
நுங்கம்பாக்கம், சென்னை-34

அறிவியல் அறிஞர்
**ஸ்டீபன் ஹாக்கிங்** எழுதியுள்ள
**'கடவுள் இருக்கின்றாரா'**
போன்ற வினாக்களுக்கு விடை தரும்,
'BRIEF ANSWERS TO THE BIG QUESTIONS'
நூல் அறிமுகம்

திராவிட இயக்கத் தமிழர் பேரவை

**அனைவரும் வருக!**

# அறநிலையத்துறைக்கு ‘அவாளால்’ ஆபத்து

**வெற்றிச்செல்வன்**

தமிழ்நாட்டின் கோயில்களிலிருந்து அறநிலையத்துறை வெளியேற வேண்டும் என்ற ஒரு கோரிக்கையும், அது குறித்த உண்மைக்குப் புறம்பான பல்வேறு செய்திகளும் அண்மைக் காலங்களில் சமூக ஊடகங்களில் பரவலாகப் பரப்பப்பட்டு வருகின்றன. 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்து முன்னணி அமைப்பின் மாநாட்டில், கோயில்கள் அனைத்தையும் அறநிலையத் துறையிலிருந்து விடுவித்து சுயேட்சையான நிர்வாக அறக்கட்டளையிடம் ஒப்படைக்க வேண்டும் என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கோரிக்கை யாருடையது, எத்தகையது, அறநிலையத் துறையின் வரலாறு என்ன, அதன் பங்களிப்பு என்ன என்பதைப் பற்றிக் காண்போம்.

முதலாவதாக, இக்கோரிக்கை இந்துக்களின் கோரிக்கை என்பதே தவறானது. இந்துக்களின் பிரதிநிதிகள் என்ற போர்வையில், மதவாத அரசியலை முன்னிறுத்தும் அமைப்புகளே இத்தகைய கோரிக்கையினை முன்வைக்கின்றன.

இந்து சமய அறநிலையத்துறைச் சட்டம் கடவுள் நம்பிக்கையாளர்களால் கோயில் சொத்தைப் பாதுகாக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்ட சட்டம். இதன் வரலாறு என்ன? ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், பிரிக்கப்படாத பழைய சென்னை மாகாண அரசின் 1817 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 7 வது பிரிவு, கோவில்களை நிர்வகிக்கும் அதிகாரத்தை ரெவின்யூ போர்டுக்கு வழங்கியது.

1863 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அறநிலையச் சட்டம் XX- ன்படி, இந்திய மதங்களில் தலையிடுவதில்லை என்ற பொதுக் கொள்கையோடு, கோயில் நிர்வாகத்திலிருந்து ஆங்கிலேய அரசு விலகிக் கொண்டது. இந்தச் சட்டப்படி, அரசு எல்லாப் பொறுப்புகளையும் கோயில்களின் அறங்காவலர்களுக்கு வழங்கியது.

1905 ஆம் ஆண்டு பெல்லாரியில் நடைபெற்ற மாநாட்டில், இந்து அறக்கட்டளைகளில் நிர்வாகச் சீர்குலைவும், நிதி மோசடிகளும் அதிகமாக உள்ளன; ஆகவே, தேவஸ்தானக் கமிட்டிகளின் உறுப்பினர்களை அளவாக நியமிக்கவும், கோயில் கணக்கைப் பருவம்தோறும் வெளியிடவும் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1907 ஆம் ஆண்டு தரும ரட்சண சபை என்ற அமைப்பு, கோயில்களில் நிதி நிர்வாகத்தினை முறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையினை எழுப்பியது.

இந்நிலையில், கோயில் நிதிகள் முறையாகப் பயன்படுத்தப் படவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து முன்வைக்கப்பட்டது. கோயில்களின் சொத்துகளுக்கும், மானியங்களுக்கும் சரியான பாதுகாப்பு இல்லை. கோயில் நகைகளுக்குச் சரியான கணக்கு இல்லை; அவை குருக்களின் வீட்டுப் பொருளாகவே இருந்து வந்தன. கோயில்களில் நிர்வாகச் சீர்குலைவு உச்சகட்டத்தை எட்டியது. இவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கவும், கோயில்களின் சொத்தை மீட்கவும் கொண்டு வரப்பட்டதே அறநிலையத்துறைப் பாதுகாப்புச் சட்டமாகும்.




சட்டமன்றத்தில் இம்மசோதாவைக் கொண்டு வருவற்குக் கோபாலசாமி அய்யங்காரைச் சிறப்பு உறுப்பினராக (Expert member) நியமித்தார் பானகல் அரசர். சட்டம் நிறைவேற்றப்பட்டு, துறை அமைக்கப்பட்டவுடன் அதன் முதல் தலைவராக, சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி சதாசிவ அய்யர் நியமிக்கப்பட்டார். இவ்விருவரையும் பயன்படுத்திக் கொண்டதால், அறநிலையப் பாதுகாப்புத் துறை அமைக்கப்பட்டதற்கான எதிர்ப்பைக் குறைக்க உதவியது. எனினும் இச்சட்டத்தை நீதிக்கட்சி பெரும் எதிர்ப்புக்கிடையேதான் நிறைவேற்ற முடிந்தது. நீதிக்கட்சியின் முதல் அமைச்சரவையில் (1920–23) கொண்டு வரப்பட்ட மசோதா, இரண்டாவது அமைச்சரவையில்தான் (1923–26) நிறைவேற்றப்பட்டது.

கோயில்கள் மக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்டவை. அவை அரசால் நிர்வகிக்கப்படுவதே சரியானது. சான்றாக, அறநிலையத்துறை கையகப்படுத்தும் கோயில்களின் நகைகள் ஆண்டுதோறும் பரிசோதிக்கப்பட்டுத் தணிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றன. காலத்திற்கும், அந்த நகைகள் பாதுகாக்கப்படுகின்றன. இதன்மூலம் வெளிப்படைத்தன்மை (Transparency) உறுதிப்படுத்தப்படுகின்றது. இதை ஓர் அரசு அமைப்பால் மட்டுமே செய்ய முடியும். எந்த ஒரு நிர்வாகத்திலும் குறைபாடுகள் ஏற்படவே செய்யும். குறைபாடுகளைக் களைவதும், நிர்வாகத்தை நெறிப்படுத்துவதும் ஓர் அமைப்பைச் சரிசெய்யுமே அல்லாது, அந்த அமைப்பையே கலைத்து விடுவது சரியான தீர்வாகாது. அரசால் நிர்வகிக்கப்படும்போது மட்டுமே நிர்வாகக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டவும், தவறுகளைத் தட்டிக் கேட்கவும் இயலும்.

மேற்காணும் காரணங்களை முன்னிறுத்தியே, கடந்த பிப்ரவரியில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையால் நடத்தப்பட்ட சமூகநீதி மாநாட்டில் அறநிலையத் துறையைக் காப்பாற்ற வேண்டித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனவே இந்து சமய அறநிலையத் துறையைச் சிலர் அபகரிக்கும் முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட்டு, பொதுச் சொத்து அரசின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து இருப்பதே சமூக நீதியும், நியதியுமாகும்.

*சமூக நீதி மாநாடு, 2018. தீர்மானம் 1*

**நீதிக் கட்சி ஆட்சியில் உருவாக்கப்பட்ட இந்து சமய அறநிலையத் துறையைக் கலைப்பதற்கான பெருமுயற்சி ஒன்று, தன்னலம் மிக்க கூட்டம் ஒன்றினால் இப்போது தொடங்கப்பட்டுள்ளது. இந்துக் கோயில்களை இந்துக்களிடம் கொடுத்து விடுங்கள் என்பதாக அக்கோரிக்கை முன்வைக்கப்பட்டாலும், அதில் எள்ளளவும் உண்மையில்லை. இந்துக்கள் என்னும் பெயரில், வெறும் மூன்று விழுக்காடு மட்டுமே உள்ள ஒரு குறிப்பிட்ட சாதியினர், மொத்தக் கோயில் சொத்துக்களையும் தாங்கள் மட்டும் அபகரித்துக் கொள்வதற்கான திட்டமே இது. எனவே தங்களை இந்துக்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் கோடிக்கணக்கான வெகுமக்களின் சொத்துகளைப் பாதுகாக்கும் கடமை, கடவுள் நம்பிக்கை உடையவர்களுக்கு மட்டுமின்றிப் பகுத்தறிவாளர்களுக்கும் உள்ளது.**

**ஆதலால், எக்காரணம் கொண்டும் இந்து அறநிலையத் துறை கலைக்கப்படக் கூடாது என்று இம்மாநாடு வலியுறுத்துவதுடன், தில்லை நடராசர் கோயிலையும், தீட்சிதர்களிடமிருந்து மீண்டும் அரசு மீட்டெடுக்க வேண்டும்.**

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## சென்னைக் கருத்தரங்கம்



3.11.2018 அன்று காலை, சென்னை, சாந்தோமில் கிறித்திவ நல்லெண்ண இயக்கத்தின் சார்பில் கருத்துப் பட்டறை நடைபெற்றது. இயக்கத்தின் தலைவர் இனிகோ, மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா, திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொதுச் செயளாலர் சுப.வீரபாண்டியன், பேராசிரியர் சுந்தரவள்ளி ஆகியோர் பங்கேற்றனர்

## நூல் வெளியீட்டு விழா




மறைந்த பேராசிரியர் அனந்தன் அவர்களின் இயற்பியல் தொடர்பான நூல் ஒன்று 4.11.2018 ஞாயிறு காலை, சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் வெளியிடப்பட்டது. தோழர் சுப.வீரபாண்டியன் நூலை வெளியிட்டு உரையாற்றினார். கிழக்கு பதிப்பகத்தின் வெளியீடாக இந்நூல் வந்துள்ளது.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## இலங்கையின் குழப்பம்!

இரண்டு தேசிய இனங்களைக் கொண்ட நாடு இலங்கை. ஒன்று தமிழ்த் தேசிய இனம், மற்றொன்று சிங்களத் தேசிய இனம்.

பவுத்த பேரினவாதச் சிங்கள அரசின் முந்தைய அதிபர் ராஜபக்சே தமிழர்களை ஒழித்துக்கட்டுவதில் முனைப்புக் காட்டியவர்.

அவரின் அமைச்சரவையில் இருந்த சிறிசேனாவும் அப்படித்தான். ரணில் விக்ரமசிங்க இவர்களுக்குக் கொஞ்சமும் குறைந்தவர் இல்லை.

ரணில் இந்தியச் சார்பை விரும்புபவர். ராஜபக்சே முழுவதும் சீனாவின் கைப்பாவை.

இலங்கை பிரச்சனையைச் சரியாகச் சொன்னால் அது தென்கிழக்காசிய நாடுகளின் மையப்புள்ளி.

பிலிப்பைன்ஸ், டிகோகார்ஷியா போன்ற கிழக்காசியப் பிராந்தியத்தில் ராணுவத் தளங்களை வைத்துள்ள அமேரிக்கா, இலங்கை திரிகோண மலையிலும் அப்படி ஒரு தளத்தை அமைக்க முயல்கிறது.

அதை முறியடிக்க இலங்கையில் ஊடுறுவி பெருமுதலீடுகளைச் செய்து ஏறத்தாழ இலங்கையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது சீனா.

இந்த இரு வல்லரசுகளை எதிர்கொண்ட விதத்தில் இந்தியாவுக்கு ஈழப் பிரச்சனை ஒரு மையப்புள்ளி.

இன்று ஈழத்தில் போர் நடக்கவில்லை என்றாலும், ஈழ மக்கள் மீதான ஒடுக்குமுறை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

அது போல இலங்கையில் அமைதி நிலவி வருகிறது என்று சொல்லிக்கொண்டாலும், அங்கே குழப்பங்கள்தான் தொடர்கின்றன என்பதை இன்றைய அரசியல் உணர்த்துகிறது.

ரணிலுக்கும், சிறிசேனாவுக்கும் ஏற்பட்ட கருத்து மோதலில் ராஜபக்சேவை பிரதமராக்கினார் சிறிசேனா. பெரும்பான்மை ரணிலுக்கு இருந்த காரணத்தினால் இன்று ராஜபக்சே, பிரதமர் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

இலங்கையின் இந்தக் குழப்பத்தை இந்தியா உள்பட உலக நாடுகள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றன. இதில் ஈழத்தமிழர்களின் வாழ்வும் பின்னிப் பிணைந்திருக்கிறது.

அத்துடன் தென்கிழக்காசியாவின் எதிர்கால வல்லாண்மை ஆதிக்கமும் இங்கு இப்பொழுது கேள்விக் குறியாக இருக்கிறது.

## கண்டனக் கூட்டம்




வடமொழி சாஸ்திரங்களைத் தழுவி எழுதப்பட்ட வழிநூலே திருக்குறள் என்று கூறும் நாகசாமியின் ஆங்கில நூலைக் கண்டித்து 7.11.2018 அன்று சென்னை பெரியார் திடலில், தமிழர் தலைவர், ஆசிரியர் தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. திரு பழ.கருப்பையா, பேராசிரியர் மறைமலை, தோழர் சுப.வீரபாண்டியன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

திராவிடத் தமிழர் அறக்கட்டளை சார்பில்

# கருஞ்சட்டைப் பதிப்பகம் தொடக்க விழா
# நான்கு நூல்கள் வெளியீடு

**17.11.2018**

சனிக்கிழமை மாலை 6 மணி,
இந்திய அலுவலர் சங்கம் (Indian Officers Association), அவ்வை சண்முகம் சாலை,
அண்ணா சிலை அருகில், ராயப்பேட்டை, சென்னை–14

## அனைவரும் வருக...

**அன்புடன் அழைக்கும்**

**சுப.வீரபாண்டியன்**
மேலாண்மை அறங்காவலர்
திராவிடத் தமிழர் அறக்கட்டளை

**'பெல்' ராஜன்**
இயக்குனர்
கருஞ்சட்டைப் பதிப்பகம்

திராவிடத் தமிழர் அறக்கட்டளை

# நலிந்தோர்க்கு உதவும் நல்விழா!

01.12.2018, சனிக்கிழமை மாலை 6 மணி, இடம்: வி ஜி எஸ் மகால், திண்டுக்கல்

வரவேற்புரை: தோழர் புலேந்திரன்
தலைமை: தோழர் எழில். இளங்கோவன்

முன்னிலை:
தோழர்கள் சிங்கராயர், சிற்பி, செல்வராஜ், தமிழினியன், ஆனந்தராஜ், பார்த்திபன்

உதவிகள் வழங்கிச் சிறப்புரை:
திரு ஐ.பி. செந்தில் (சட்டமன்ற உறுப்பினர்)

வாழ்த்துரை: தோழர் மா. உமாபதி, கவிஞர் கடவூர் மணிமாறன், தோழர் இரா. உமா

நன்றியுரை: தோழர் ஞானசேகரன்

இணைப்புரை: ரவிச்சந்திரன்

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.